# உருவங்கள்
# மானிடராய்



ஆ.மு.சி. வேலழகன்

# உருவங்கள் மானிடராய் ....!

ஆ.மு.சி. வேலழகன்

இளவழகன் பதிப்பகம்
4, இரண்டாவது தெரு,
ஆண்டவர் நகர், கோடம்பாக்கம்,
சென்னை – 600 024.

உருவங்கள் மானிடராய் ... !

© ஆ.மு.சி. வேலழகன்

முதற்பதிப்பு : டிசம்பர் 1993

தயாரிப்பு – வே. கருணாநிதி

இலங்கையில் விற்பனை உரிமை

**குறிஞ்சி வெளியீடு**
129/25 ஜெம்பட்டா வீதி,
கொச்சிக்கடை,
கொழும்பு – 13.

**ஆதவன் அச்சகம்**
முனைத் தெரு,
மட்டக்களப்பு.

**தர்சினி ஸ்டுடியோ**
மெயின் வீதி,
வாழைச் சேனை.

விலை : 15.00 (இந்தியா) 30.00 (இலங்கை)

Laser Typeset at : LKM Computer-Prints, Madras - 17.
Printed at : Kannappa Art Printers, Madras - 5.

*என் அம்மாவுக்கும் .....*

*அப்பாவுக்கும் ..........*

# முன்னுரை

மானுடம் உன்னதமானது. ஏனைய ஜீவராசிகளை விட உயர்ந்தது. பல மாண்புகளைக் கொண்டது. "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்றார் ஔவையார். இந்த மனித இனம் இன்று தாழ்நிலை அடைந்து விட்டது என்பது பலர் அபிப்பிராயம்.

இதை நம் மாநுடத்தின் வீழ்ச்சி எனலாம். புறவய வளர்ச்சி அபரிதமாகப் பெருக அகவய வளர்ச்சி அடியோடு இல்லாத நிலை.

மானிடரிற் பலர் இன்று உருவத்தில் மாத்திரமே மனிதராய்க் காட்சி தருகின்றார்கள்.

உருவத்தில் மானிடனாகக் காட்சி தரும் இவர்கள் உள்ளத்தில், செயல்களில் மிருகங்களாக இருக்கிறார்கள். இது மனித இனம் பெற்ற வீழ்ச்சி. மனிதனின் இந்த வீழ்ச்சி கவிஞர்கள் பலரின் உணர்வுகளைக் கிளறியுள்ளது.

கவிதை மனச் சாட்சியின் குரல் என்பர்.

வேலழகனின் "உருவங்கள் மானிடராய்" எனும் இக்கவிதைத் தொகுப்பும், உருவத்தில் மானிடராயும் உள்ளத்தில் வேறாயும் மனிதர் பலர் உள்ள நிலை கண்டு அதிருப்தியுற்று, மனம் குமைந்து, கிண்டல் பண்ணும் கவிஞனின் உணர்வோட்டங்களைக் கொண்டுள்ளது.

சமூகத்தையும், சமூகப் போலிகளையும் விமர்சனம் பண்ணும் வேலழகன் என்ன செய்ய வேண்டும் என்று திட்டவட்டமான சில

கருத்துக்களை முன் வைப்பது அவருடைய ஆக்கப்பூர்வமான சிந்தனைப் போக்கைக் காட்டுகிறது.

சமூகத்தை விமர்சனம் செய்பவர்கள், வெறும் விமர்சகர்களாக மாத்திரம் நில்லாது, ஆக்கப்பூர்வமான கருத்துக்களை முன்வைப்பதும் அவசியம். இவ்வகையில் வேலழகன் பல கவிஞர்களை விட வித்தியாசமானவராகத் தென்படுகிறார்.

கவிஞரின் பார்வை நிலத்தில் வேர் கொண்டு உலகைப் பார்க்கிறது.

இந்திய நாட்டின் தியாகிகளான வ.உ.சி. யையும், சுப்பிரமணிய பாரதியையும், காந்தி மகானையும் மாத்திரம் புகழாது, வரலாற்றிலே வராத தம்மூர்க் காந்தியான கண்டுமணி ஐயாவை "பொன் பூத்த மனம் கசியும் புதுமைப் பூவாய்க்" காட்டும் கவிதையில் அவரது இப்பார்வை தெரிகிறது.

பார்க்கிறேன், சூழல், அயல் வாழும் மாந்தர்
படுதுயரை, பரிதவிப்பை, அவல வாழ்வை
ஈர்த்தணைப்பார் இல்லாராய் சேரிக்குள்ளே
ஈயெறும்பு கிருமியொடு இடருகின்றார்
ஆர்த்தொலிக்கும் திருக்கோயில் சாமி உன்றன்
அருட்பார்வை இவர்கள் பால் இல்லையென்றால்
ஆருக்குச் சாமி நீ? அடியார்க்குள்ளே
அடையாளங்கண்டுதான் கருணை வீச்சோ?

என்ற பாடல் கவிஞரின் சமூக விமர்சனத்திற்கும் உளக் கொதிப்பிற்கும் உதாரணப் பாடலாகும்.

மூட நம்பிக்கை, சாதிபேதம், ஏழை பணக்காரன் பேதம் என்பவற்றிற்கெல்லாம் எதிரான கவிஞரின் குரலினைக் கவிதைகளிற் காண்கிறோம்.

புதுக்கவிதைப் பாணி பிரபல்யம் பெற்றிருக்கும் இக்கால கட்டத்தில் மரபு வழிக் கவிதை நெறி நின்று வேலழகன் புதிய சிந்தனைகளைத் தருகின்றார்.

எளிமையான சொற்கள், இயல்பான கவிதை ஓட்டம், தேவையான சிந்தனைகள் என்பன கவிதை நூலுக்கு அழகும், வளமும் தருகின்றன.

இத்தகைய கவிதைகளை அளித்து சமூகப்பணி புரியும் வேலழகனுக்கு எனது பாராட்டுக்கள்.

**பேராசிரியர் சி. சந்தானம்**
துணைவேந்தர்,
கிழக்குப் பல்கலைக் கழகம்,
இலங்கை.

# கவிதை திறக்கும் கந்தகக் கிடங்கு

என்னுடைய அன்பிற்கினிய மாணவர் திரு. வே. கருணாநிதி படைப்பாற்றலோடு தமிழ் படிப்பதற்கு வந்தவர். மாணாக்கப் பருவத்திலேயே கவிதைத் தொகுதிகள் சில வெளியிட்டுப் பலருடைய கவனத்தைக் கவர்ந்தவர். கடந்த சில வாரங்களுக்கு முன், அச்சுச்சூடு தணியாத கவிதை ஏடுகள் சிலவற்றை என்னிடம் தந்து 'முன்னுரை வேண்டும்' என்றபோது – நான் எண்ணிப் பார்க்கவில்லை, அவை அவருடைய அருமைத் தந்தையார் திரு. ஆ.மு.சி. வேலழகன் ஆக்கியவையாக இருக்கும் என்று. எனவே, வியப்பில் மலர்ந்த மகிழ்ச்சியோடு என் வாக்கியங்களுக்குள் வருமாறு வார்த்தைகளை இப்போது அழைக்கிறேன்.

அழுத்தமான கவிதை ஆளுமையோடு திரு. ஆ.மு.சி.வேலழகன் தமிழன் தாழ்வாரத்தில் நடைபோடுகிறார். இயல்பு, எளிமை, இனிமை இம்மூன்றும் கலந்த கலையழகில் கவிதைகள் இவரிடம் வெளி வருகின்றன. யாப்புக்குள் இவரும் – இவருக்குள் யாப்பும் திணறாத வகையில் சொற்கள் கவிதைகளை இப்படியெல்லாம் நம் நெஞ்சங்களில் தூவிச் செல்கின்றன. முடிவில் சொற்கள் மிஞ்சாமல் கவிதைகள் தரும் கருத்துக்களும் உணர்வுகளும் மிஞ்சுவதை, இந்நூலின் வெற்றி என்று சொல்லலாம்.

இந்தப் பாட்டுப் பறவைக்குத் தமிழ்ப்பற்றும் மானுடப்பற்றும், விரியும் இரண்டு வீரியச் சிறகுகளாக இருக்கின்றன. அவற்றின் அசைப்பில் நம் உணர்வு நரம்புகள் அதிர்கின்றன. வாடகைக்கு வாயை விட்டுப் பிழைக்கும் தமிழனைப் பார்த்துக் கவிஞர் கொதித்தும் குமுறியும் முழங்குகிறார்.

தமிழேதான் தமிழர்நம் நாவாய் நின்று
    தமிழோம்பும் திறன் வேண்டும்!' என்று.

பதவிக்கும் பணத்திற்கும் நாவை விற்றும், வாடகைக்கு விட்டும் நாய்ப்பிழைப்புப் பிழைக்கும் படித்தவனைவிட, உள்ளத்தில் தமிழ் ஊற்றுப் பெருக்கெடுக்கும் உழைப்பாளிகளை – உழவர்களைக் கவிஞர் நம்புவதையும் ஒரு கவிதை நமக்குக் காட்டுகிறது.

கனிச்சோலை மாந்தோப்பு
    கதலி வனம் பலாத்தோட்டம்
இனிப்படைய உன் தமிழை ஏற்று – மக்கள்
    இன்ப மொன்றே உன்பணியாய் மாற்று!

இக்கவிதையில் தமிழாகவே வாழ்ந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பரம்பரைத் தொடர்ச்சியை நாம் காண முடிகிறது. தமிழ்க் கனவைப் பரிமாறுவதற்கு ஏற்ப, உணர்வு உறக்கத்தில் கிறங்கிக் கிடக்கும் தமிழனுக்கு, இன உணர்வு எழுச்சியை இவர் ஊட்டுவது பொருத்தமாக இருக்கிறது என்பதன்று – அவசிய அவசரத் தேவையாகவே இருக்கிறது என்பேன்.

'தமிழராவோம்' என்னும் கவிதையில் தமிழினத்தின் தனித் தன்மைகளை உண்மை சிறக்க முழங்கும் கவிஞர் – எச்சரிக்கைக் கொடிகளை வரி ஒவ்வொன்றின் உச்சியிலும் ஏற்றி வைக்கிறார்.

தமிழர்தம் ஆட்சி யோடு
    தகர்ந்தது இனத்தின் கோட்டை
தமிழர்தம் வாழ்க்கை விட்டு
    தனித்தது தமிழர் சால்பு

*தமிழர்தம் சிந்தை சாகச்*
*செத்தன இலக்கி யங்கள்*
*தமிழரின் தமிழன் இன்று*
*தமிழனா? ஆய்வு தேவை!*

*ஆய்வு தேவை! என்று வேகப்படுத்தும் இக்கவிதை வரிகளில் தமிழ்த் தேசிய இனத்தின் வாழ்வும் வீழ்வும் – தெளிவாக எடுத்துக் காட்டப்படுகின்றன. தமிழரின் தமிழன் இன்று தமிழனா? இக்கேள்வி கந்தகக் கிடங்கிலிருந்து வெடித்துச் சிதறுகின்றது. மதிப்புயர்ந்த மானமுடைய தமிழன் மட்டுமே மகத்தான உலகனாகவும் இருக்க முடியும்.*

*கவிஞர் வேலழகன் – இத்தகைய தமிழ் உணர்வையும் இன உணர்வையும் மீட்டெடுப்பதற்கு தமிழனுடைய பெருமைக்குரிய இலக்கியங்களை – தலைவர்களை – அவனுக்கு நினைவுறுத்த வேண்டிய தேவையைத் தெரிந்தவராக இருக்கிறார். திருவள்ளுவரைப் பலமுறை தமிழனுக்கு எடுத்துக்காட்டி – அவ்வொப்பற்ற சிந்தனையாளன் வழிவந்த பெருமையை உணர்த்துவதோடு இனவுணர்வு ஊட்டிய தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, புரட்சியாளர் ஜீவா – இனிய தமிழ்த் தென்றல் திரு.வி.க., எரிமலைக் கவிஞர் பாரதிதாசன், எப்போதும் சுடரும் மு.வ. ஆகியோரையெல்லாம் முன்னோடிகளாக அவன் கருதிக் கடைத்தேற வேண்டும் என்றும் தன் பாட்டிலே பாதை போட்டுத் தருகிறார்.*

*மானுடநேயம் – இவர் வார்த்தைகளை ஈரப்படுத்தி வைத்திருப்பதையும், கோபப்படுத்தி வைத்திருப்பதையும் – இத் தொகுப்பில் பல இடங்களில் என்னால் காண முடிகிறது. மானுட நேயத்திற்கு எதிரானவையாக இருக்கிற சமூக வாழ்வின் ஏற்றத் தாழ்வுகள், முறைபிறழ்ந்த அரசியல் நெறிகள், ஆட்சி அமைப்புகள் ஆகியவற்றின் மீதும், தனி மனிதப் பணவெறி, இல்லாண்மைச் செருக்கு*

ஆகியவற்றின் மீதும் நேத்திரம் சிவந்து ஆத்திரப்படுகின்றன. ரோஜாக்களைச் சிரிக்காமல் கவிதைகள் ராஜாளிகளாகப் போர்க் குணத்தோடு சிறகு விரிக்கும்போது –

ஊதுலை அனல் காற்றாய்
உணர்வுத் தீ கொப்பளிக்க – கனலும்

வேலழகன், வாழ்வின் வரவேற்பை இழந்தவர்களின் அணி வகுப்பில் இடம் பெறுவதை என்னால் காண முடிகிறது.

'தண்ணீரால் மறுதலிக்கப்பட்ட தாகங்களாய் வானத்தால் மறுதலிக்கப்பட்ட வைகறைகளாய்' – வாடும் மானுடத்துக்கு வழியடைத்து வைப்பதில் உடமை வர்க்கத்துக்குக் கடவுளும் உடந்தையாவதைக் கண்டு அம்பறாத்தூணியை வெறுமையாக்கி விட்டு கூரிய சொற்களை அக்கடவுள் மார்புக்கும் குறி வைக்கின்றன. வேலழகனுக்கு உள்ளே ஓர் ஆன்மிகவாதி உண்டா என்று எனக்குத் தெரியவில்லை. ஒரு வேளை அப்படி இருப்பினும் அந்த ஆன்மிகவாதியை வாயடக்கி வைத்து விட்டு ஒரு கலகக்காரன் பேசுவதை என்னால் – பின்வரும் வரிகளில் கேட்க முடிகிறது.

ஆர்த்தொலிக்கும் திருக்கோயில் சாமி உன்றன்
அருட்பார்வை இவர்கள்பால் இல்லை என்றால்
ஆருக்குச் சாமி நீ?

பாடும் புல்புல் பறவையென்று பாராட்டப்பட்ட அல்லாமா இக்பால் – இறந்துவிட்ட லெனினை எழுப்ப இறைவனிடம் அக்கினிக் கரங்களாக வினாக்களைத் தொடுக்கும் இடம் என் நினைவுக்கு வருகிறது.

*யாருடைய கடவுள் நீ*
*கீழ் நாட்டவனுக்கு வெள்ளையனே கடவுள்!*
*வெள்ளையனுக்கோ*
*காசே கடவுள்!*
*நீ, யாருக்குக் கடவுள்?*
*நியாயம் தெரிந்தவன் நீ*
*ஆற்றல் நிரம்பியவன் நீ! – எனினும்*
*உழைப்பவனுக்கு மட்டுமே*
*ஏன் இத்தனை துயரங்கள்?*
*முதலாளித்துவக் கப்பல்கள் – எப்போது*
*மூழ்கப் போகிறது?*

கடவுளின் நெற்றி நடுப்பொட்டு நெருப்பாய்ச் சுடுகிறது கவிஞனின் வினாக்களால். 'வல்லமை பெற வேண்டும்' – என்னும் தலைப்புடைய கவிதைகளில் – நிலப்பிரபுத்துவம் – சமயத்தளை – ஆதிக்க அரசியல் ஆகியவை தோலுரித்துக் காட்டப்படுவதுடன், அவற்றை வேரோடும் வேரடி மண்ணோடும் சாய்த்துவிட்டு, உருவாக்க வேண்டிய ஒளி பொருந்திய வாழ்வுநிலை பற்றியும் – சிந்திக்கத்தக்க எண்ணங்களைக் கவிஞர் வெளிப்படுத்தியுள்ளார். எல்லார்க்கும் எல்லாம் என்பதன்று பொதுவுடைமை; உழைப்பவர்க்கே எல்லாம் என்பது தான் பொதுவுடைமை! என்று ஒரு கவிதையில் நான் எழுதியிருக்கிறேன்.

*நல்லவர் மட்டும் செல்வராயமையும்*
*நடைமுறை வர வேண்டும்!*

என்று வேலழகன் பாடும்போது – உழைப்பவனுக்கு மட்டுமே உலகம் உரியதாக வேண்டும் என்கிற கருத்தை இவர் புலப்படுத்துவதாகவே எடுத்துக் கொள்கிறேன். ஏனெனில் செல்வத்திற்கு முதன்மை தருகிற

*எந்தச் சமூகமும் தனது சீரழிவைத் தடுத்து நிறுத்திவிட முடியாது. புரட்சிகரமான போராட்டத்தின் மூலம் மாற்றியமைக்கப்பட்ட சமுதாயம் தலைக்குப்புறக் கவிழ்ந்து போவதே – மறுபடியும் தலையெடுக்கும் 'உடைமை' ஆசையால் தான் என்பதை வரலாறு கண்டு வருகிறது. எனவேதான் மாவோ, நிரந்தரப் புரட்சியை (Parmanent revolution) வற்புறுத்தினார்.*

*திரு. வேலழகன் கவிதைகளில் தூக்கலாகக் காணப்படும் இக்கருத்து நிலைகள் தவிரவும் வேறு சிற்சில கோணங்களில் எண்ணங்கள் தெறித்து விழுந்துள்ளன. ஈழ மண்ணின் சாரம் மிகுதியாக வெளிப்படவில்லை எனினும், ஈழத்துத் தமிழகத்தோடு உலகளாவிய நிலையில் வாழ்கிற தமிழர் எல்லோருமே தம்மை இக்கவிதைகளுக்குள் கண்டு கொள்ள முடியும் என்பது என் நம்பிக்கை.*

*ஈரோடு தமிழன்பன்*

*லாயிட்ஸ் காலனி,*
*இராயப்பேட்டை,*
*சென்னை – 600 014.*

# கவிவேந்தர் கா. வேழவேந்தன் அவர்களின் அணிந்துரை

நெஞ்சவானிலே அவ்வப்போது கிளர்ந்தெழும் நெடிய கருத்து மின்னல்களே கவிதைகள் என்பேன். அந்தச் சிந்தனை ஒளிப்பிழம்புகளைச் சிறைப் பிடித்து வந்து விரல்நுனி வழியே சொல்லோவியமாக்கிக் காட்டுவதே இலக்கியக் கலை!

அதோ, அது ஒரே ஒரு துளி மைதான்! அதைப் பயன்படுத்தும் வகையில் அருமையாகப் பயன்படுத்தினால், அந்தக் கறுப்புமை எத்தனையோ கோடி உள்ளங்களுக்கு அறிவொளியைப் பாய்ச்சுகிறதே; அது எப்படி?' என்று வியந்தார் கவிஞர் பைரன்.

ஈழத்துக் கவிஞர் ஆ.மு.சி. வேலழகனாரின் இக்கவிதைப் பூங்கொத்தினை நான் சுவைத்தபோது, இந்த உணர்வுகளைப் பெற்றுப் பூரித்துப் போனேன்.

ஆண்டுக்காண்டு கிளைத்திடும் புதுப்புது அரசியல் கட்சிகள், சமுதாயத்தை வாட்டும் 'தீக்குரல்' களை எழுப்பும் நேரத்தில், நீண்ட புகழ் மண்டிய திருக்குறள் நெறியொன்றே நிலையான அமைதிக்கு உரிய வழி என்று தன் வாழ்நாளைக் காணிக்கை தந்துவிட்ட இக்கவித்தந்தையின் உயிர்மூச்சே பாடல் இழைகளாக வடிவெடுத்திருக்கின்றன; போற்றுகின்றேன்.

ஓங்கும் மானிட நேயத்தின்
உணர்வாய் வானின் விரிவாகி
நீங்கா அன்பின் நிறை சூழ்ந்த
நெறியாம் வள்ளுவ வழிமேவி

என்ற வரிகளால், முதற் கவிதையிலேயே தன் முகவரியைப் பதிய வைக்கின்றார் கவிஞர்.

*புல்லை அகற்றி அந்தப்*
*புதர்க்காட்டை நன்குழுது*
*நெல்லை விதைத்தான்*
*நெஞ்செல்லாம் உயிர்பூக்க!*

என்ற நயமிகு தொடர்களை எழுதும் கவிஞர் தமிழ்ச் சமுதாயத்தைச் சீர்படுத்த, எத்தனை எத்தனை வகை மருந்துகளைத் தர முனைகின்றார் என்று அறியும் போது இறும்பூதடைகின்றோம்.

*வாழ்வைத் துலக்குதல் இலக்கியம் – அதன்*
*வான்சுவை உயிருக்கு முக்கியம்!*

எனும் சொற்சரத்தால், சாகாத இலக்கியங்களுக்கு ஒரு தனி மகுடம் அல்லவா சூட்டுகின்றார்.

*முட்டாளைச் சமூகத்தில் பணமே – ஒரு*
*மூதறிவாளனாய் ஆக்கல் உன் குணமே!*

என்ற பாட்டடிகளால் இன்றைய பணப் பேய்களுக்கு மிகச் சரியான சாட்டையடி கொடுக்கின்றார். அடிக்க அடிக்க அம்மியும் நகருமாமே; இந்த பாழும் மனிதன் மட்டும் அங்குலமும் நகர மாட்டானா?

*உரிமையாம் வாழ்வு தேவை!*
*உறுதியாம் அமைப்புத் தேவை!*
*பெருமையை ஏலம் போடும்*
*பேடிமை எவர்க்குத் தேவை!*

என்ற நெருப்பு வரிகள் தமிழரின் நெஞ்ச உலைக் களத்தில் தீப்பொறிகளைக் கிளப்பாதா என்று ஏங்குகின்றார் வேலழகர். வெல்லட்டும் அவர் குறிக்கோள்!

*கனிச்சோலை மாந்தோப்பு*
*கதலிவனம், பலாத்தோட்டம்*
*இனிப்படைய உன் தமிழை ஏற்று! – மக்கள்*
*இன்பமொன்றே உன் பணியாய்ப் போற்று!*

என்ற சந்தநடைச் சொற்களால், கதலியும் பலாவும் இனிக்க வேண்டுமானால், அவற்றிற்குத் தமிழ்ச் சுவையை ஏற்ற வேண்டும் என்ற கவிஞரின் புதிய சிந்தனை இலக்கிய நெஞ்சினைச் சிலிர்க்க வைக்கின்றது. பாநயத்தைப் பாராட்டுகின்றேன்.

*காமியரும், கயவர்களும் நடத்தும் கொள்ளை*
*கந்தா! உன் கருணைஎனத் துள்ளும் போது*
*சாமிநீ சடங்கிற்குள் குந்திக் கொண்டு*
*சாட்டாங்கப் பாவனையில் இருத்தல் என்ன?*

எனும் ஈரோட்டுக் கேள்வியாய்ப் பகுத்தறிவு வேள்வி நடத்தும் கவிஞரை எந்தச் சொற்களால் புகழ்வேன்?

*சாணிக்குப் பொட்டிட்டு*
*சாமி என்பார் செய்கைக்கு*
*நாணிக் கண்ணுறங்கு*
*நகைத்துநீ கண்ணுறங்கு!*

என்ற புரட்சிக் கவிஞரின் கனல் வரிகளைப் போன்று, பொங்கும் எரிமலைக் குழம்புகளல்லவா இவை!

குலைப்பசி போக்கிட, அலைந்து கடந்து ஓடிய தமிழர் சென்ற நாடுகளிலும் அதே மாரியம்மன் கோயில்களை உருவாக்கி, உடுக்கையடித்துக் கொண்டிருக்கின்றார்களே, அந்தப் புரியாத மண்டைகளுக்குத்தான் உரத்த குரல் எழுப்புகின்றார் வேலழகர். திருந்தாத உள்ளங்கள் இனியேனும் திருந்தாதா என்று அவருடன் சேர்ந்து ஏங்குகின்றோம்.

*பழுத்த ஆலாய் நீ இருந்தால்*
*பறவை ஆயிரம் உறவாடும்*
*உளுத்த சருகாய் உதிர்ந்து விட்டால்*
*உருப்படி உனக்கு நீயேதான்!*

*என்ற பட்டயப் பாட்டுத் தொடர்களால் வாழ்வியல் தத்துவத்தை எத்தனை நளினமாகப் பாடுகின்றார்! இதன் உண்மைப் பொருள் புரியாமல் அல்லவா கானல் நீரைத் தேடி ஓடும் காட்டு மான்களாய் மனித குலம் ஓடிக் கொண்டிருக்கின்றது!*

*உயிரீந்தார் ஈ.வெ.ரா.!*
*உணர்வீந்தார் அண்ணாவே!*
*பயிரானார் நல்லிளைஞர்!*
*பகைவென்றாய் தமிழ் நிலமே!*

*இப்படி அவர் பாடும் அடிகளால், தன் முகபடாம் என்னவென்று சரியாகக் காட்டிக் கொள்கிறார்.*

*இன்றைய தமிழனின் முன்னோடிகள் இவர்களே என்ற ஆழ்ந்த பார்வை நூற்றுக்கு நூறு உண்மையல்லவா? இதை மறுப்பார் உண்டா?*

*விதியென்ற விலங்கொரு கேடு!*
*வீணராய் மனிதனைச் சிறையிடும் கூடு!*
*மதியொடு செயற்படும் முயற்சி!*
*மானிடம் கொண்டதே இப்பெரும் உயர்ச்சி!*

*வேறுபட்ட இக்கவிஞரின் எண்ணவோட்டம் நூலின் முத்தாய்ப்பாய்ச் சுடர் விடுகின்றன.*

*'எவனோ ஓர் பிரம்மன் என்போன் என்றோ தலையில் எழுதிவிட்டான்' என்ற மூடத்தனத்தின் முடை நாற்றப் போக்கினைப் பொசுக்கும் தீக்கனல் வரிகள் இவை. இந்த அறிவார்ந்த சிந்தனை*

*பரவுமானால் மனித இனம் செழித்தோங்கி வளருமே என்ற அவருடைய தீராத தாகத்தைப் போற்றி பாராட்டி வணங்குகின்றேன்.*

இக்கவிதைப் பூங்கொத்து, தமிழ் இலக்கியக் கடலில் ஒரு தனி முத்து ; தமிழன்னையின் புகழ்முடிக்கோர் புதிய சொத்து.

இந்நூலால் கவிஞர் வேலழகர் தமிழ் நெஞ்சில் ஒளிவிடும் நூலழகர் *என்பதை மெய்ப்பிக்கின்றார். இது திண்ணம்.*

*வாழிய கவிஞர் வேலழகர்!*

*வெல்க அவர்தம் வேட்கைகள்!*

*அன்பன்,*

***கா. வேழவேந்தன்***

*103, டாக்டர் இராதா கிருஷ்ணன் சாலை,*
*மயிலாப்பூர், சென்னை – 600 004.*

# என்னுரை

ஊனமுற்று, எழுந்து நடக்க முடியாமல் கிடையாய்க் கிடந்த ஒருவருக்கு ஊன்றுகோல் கொடுத்து எழுந்து நடக்க உதவிய நிலையாக, எனது கவிதைகள் சிலவற்றைத் தொகுத்தெடுத்து எமது மதிப்புக்குரிய ஐயா "கவிஞர் புரட்சிக் கமால்" அவர்களிடம் காட்டியபோது அவர் அதற்குத் திருத்தங்கள் செய்ததோடு என்னை உளமாரப் பாராட்டி இதனைக் கண்டிப்பாக வெளியிட வேண்டும் எனத் தட்டிக் கொடுத்து ஊக்கப்படுத்தி ஓர் தந்தை தன்மகனிடம் காட்டும் அன்பும், அக்கறையுமாக ஐயா அவர்கள் என்னிடம் காட்டி, தனது உடல் நலக்குறைவான வேளைகளிலும் சிரமம் எனச் சொல்லாது, பிரதிபலன் பாராது இந்நூல் வெளிவர எல்லாவகையிலும் ஆக்கப்பணி செய்த அன்புப் பெருந்தகை ஐயா அவர்கட்கு எனது முதற்கண் நன்றி.

இக்கவிதைகளைத் தொகுத்துத் தந்துதவிய சகோதரிகள் செல்வி. வாவா இராசேந்திரம், செல்வி. சரோசா இராசேந்திரம் இருவருக்கும் இக்கவிதைக்கு ஓர் முன்னுரை வேண்டிக் கேட்டபோது மறுக்காது பெருந்தன்மையோடு தந்துதவிய இலங்கை கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் உயர்திரு. சி. சந்தானம் அவர்கட்கும், அன்புத் தம்பி ச. அரசரெத்தினம் அவர்கட்கும், எனது நூலுக்கு அணிந்துரை வழங்கிய தமிழக முன்னாள் அமைச்சரும், வழக்கறிஞரும் பெருங்கவி வேந்தருமான திரு. கா. வேழவேந்தன், பேராசிரியரும் தலைசிறந்த கவிஞருமான ஐயா ஈரோடு தமிழன்பன் ஆகியோருக்கும் எனது நன்றி.

அணிந்துரை பெறவேண்டி அலைந்தவரும், ஓர் பெருநூல் வெளியீட்டு விழாவிற்கு எமையும் பார்வையாளனாக அழைத்து, பலதரப்பட்ட மேல்நாட்டு அறிஞர்களும் கவிஞர்களும் அமர்ந்திருந்த வேளையில், தமிழகம் போற்றும் மானமிகு பேராசிரியர் மதிப்பிற்குரிய ஐயா உயர்திரு. க. அன்பழகன் அவர்களிடம் என்னை அறிமுகம் செய்து வைத்து, அம்மாமனிதரின் கையாலே இச்சிறியோனுக்கு "பொன்னாடை" போர்த்திக் கௌரவிக்க வைத்தவருமான பேராளன் திரு. வா.மு. சே. ஆண்டவர். M.A., M.Phil., (Ph.D) அவர்கட்கும், மேற்கூறிய வகையிலே ஏன் அன்புமகளினும் மேலாக என்மீது பாசமும், பரிவும், மதிப்பும் வைத்து ஒத்தாசை நல்கிய, வயதில் மிகச் சிறியவளாக இருந்தாலும், கல்வியில், பண்பில், அறிவில், ஆற்றலில் இந்திய மண்ணிற்கும் குறிப்பாக தமிழுக்கும், சிறப்பாக தமிழ் நாட்டிற்கும் பெருமை தேடித் தந்தும், தந்து கொண்டும் இருக்கின்ற செல்வி. இ. சா. பர்வீன் சுல்தானா M.A., அவர்கட்கும், அட்டைப்படம் நல்கிய செல்வன் வே. உதயசூரியன்; இந்நூலை வெளியிட்ட திரு. வே. கருணாநிதி M.A., M.Phil, (Ph.D) அவர்கட்கும் எனது நன்றி!

அன்பன்,

ஆ.மு.சி. வேலழகன்

வள்ளுவன் மேடு,
திருப்பழுகாமம் – 1
கிழக்கிலங்கை.

உள்ளே .....


| | |
|---|---|
| 1. எண்ணம் சிறப்போம்! | 23 |
| 2. புழுதிப் பொய்கள்! | 25 |
| 3. பரிவுக்கே சுவாசிப்போம்! | 27 |
| 4. வாழ்க தொண்டர்! | 29 |
| 5. பாதாளத் துணை! | 30 |
| 6. தமிழரானோம்! | 32 |
| 7. ஆய்வு தேவை! | 33 |
| 8. உருவங்கள் மானிடராய் ..... ! | 35 |
| 9. சுதந்திர யாகம்! | 37 |
| 10. வரவை மிஞ்சிய செலவு ....? | 38 |
| 11. கண்ணீர் வாழ்க்கை! | 39 |
| 12. குடைநிழல் முக்தி! | 41 |

13. உழைப்பெழுந்த விடியல்! 43

14. வல்லமை பெறவேண்டும்! 45

15. உலை போட்டுப் பொங்கவா ....? 47

16. புதினம் தானோ ...? 49

17. எடு சூலம், மழு, வேல், ஈட்டி! 51

18. நன்றித் தாய்! 52

19. சுடலைதான் ...? 53

20. சர்வ சஞ்சீவி! 55

21. உனக்கு நீயே! 57

22. உறவும், வாழ்வும்! 59

23. எங்களூர்க் காந்தி! 60

24. நாம் தொழும் நாதன்! 62

# எண்ணம் சிறப்போம் !

சங்கமித்திரை வந்த தினம்
சஞ்சலமற்ற பௌர்ணமியாம்
திங்கள் மார்கழி பனிரெண்டில்
திருக்குறள் வாழ்க்கை மன்றத்தைப்
பொங்கும் செல்வ மருதநிலம்
பொதிந்த மகிந்த நகரினிலே
அங்கம் சேர்ந்து எழுச்சி பெற
அமைத்தோம் மனிதம் ஒளிவீச

எங்கும் செந்நெல் களனிகளாம்
இனிய கதலி, மா, பலவாம்
தெங்கு, கரும்பின் திருமலிந்த
திருப்பதி எங்கள் அம்பாறை,
சிங்கப் பிடரிச் சிலிர்ப்பாக
சிந்திய கதிரோன் ஒளிக்கீற்றில்
வங்கக் கடலின் அலையாகி
வள்ளுவம் படைக்கும் மன்றமிது

மாதம் தோறும் வான்பொழிய
மாந்தர் வறுமைப் பிணியொழிய
வேதப் பொருளின் வேரினிலே
வேஷம் கோஷம் கடந்தவராய்

நாதன் ஒருவன் நமக்குள்ளே
நல்லருள் சுடராய் ஒளிவீசும்
பாதம் தொழுதே மானிடத்தின்
பயன் கண்டாய்ந்து படருவமே

ஓதும் நெறியாம் திருக்குறளை
ஒரு தாய் மகவாய் உணர்வோம்பி
பேதம் கடந்தறம் பெய்தோனாம்
பெருந்தகை நெறியை மனங்கொண்டு
வேதம் நான்காய் கிளையோடி
விளைந்த நாட்டு மக்கள்யாம்
காதல் கொண்டொரு புத்துலகின்
'காவிய நாயகர் ஆவோமே'.

ஓங்கும் மானிட நேயத்தின்
உணர்வாய் வானின் விரிவாகி
நீங்கா அன்பின் நிறை சூழ்ந்த
நெறியாம் வள்ளுவ வழிமேவி
ஈங்கொரு சுவனம் எழச்செய்தே
இலங்கைத் தாயை இருப்பாட்டி
ஏங்கும் புவிக்கோர் இலச்சினையாய்
எண்ணம் சிறப்போம் வாரீரோ... ?

## புழுதிப் பொய்கள்!

அல்லைக் கடுத்தாற் போல்
அமைந்த புல்வெளியைத்
தொல்லை பல பாராமல்
தொடர்ந்து பகலிரவாய்
புல்லை யகற்றி அந்தப்
புதர்க்காட்டை நன்குழுதி
நெல்லை விதைத்தான்,
நெஞ்செல்லாம் உயிர் பூக்க!

வெல்லங் கம்பு வெட்டி
வேலிகட்டி அரணிட்டுச்
செல்லையன் தன் பணியைச்
செம்மையுறச் செய்தபின்
முல்லை அரும்புகளை
முழுவயலும் சித்திரிக்க
பல்லெல்லாம், வானம்
பளிச்சிடப் பயனாய்ந்தான்!

இல்லை இனித் தொல்லை
இல்லை என்றிருக்கையிலே,
வலலையூர்ப் பூதன்
வயலுரிமை தனதென்று

*தில்லை, காளி என்ற*
*தீயர் துணைப் பலத்தில்*
*செல்லைய னையறைந்து*
*சினந்து பகைவிரித்தான்!*

*சொந்தமெனத் தனக்குச்*
*சுரணையிலான் காளி*
*இந்த வல்லையூர்*
*எசமான் உனக்கு*
*எந்தவகை உறவென்று*
*இவர் வயலில் மேய்கின்றாய்?*
*உந்தாய்க் கிவரிடத்தில்*
*ஒட்டுறவோ? என்றானே!*

*ஊதுலை அனல் காற்றாய்*
*உணர்வுத்தீ கொப்புளிக்கப்*
*பூதன் குரல் வளையில்*
*போய் மொய்த்த செல்லையன்*
*பேதையர் தோள் வலியால்*
*பிறருடமை கவர்கின்ற*
*பாதைக்கு எமன் என்றான்*
*பறந்தன, புழுதிப்பொய்கள்!*

## பரிவுக்கே சுவாசிப்போம் !

வாழ்வைத் துலக்குதல் இலக்கியம் – அதன்
வான்சுவை உயிருக்கு முக்கியம்
சூழுணர்வில் ஒளி தேக்கியும் – ஒரு
சுந்தர மானிடம் நோக்கியும்
ஆளுமை பெருகிட வேண்டுமே – அதன்
ஆற்றலில் பேதங்கள் தாண்டுமே!

ஆயிரம் ஆண்டுகள் வாழ்வதோ – எந்த
அவாவினால் அடித்து நாம் மாள்வதோ?
நீ, பயில் கீதையின் பாடமோ? – அந்த
நெறிதேராப் பேதமை மாயமோ?
தோய் வெயில் புழுவெனத்துடிப்பதோ? – நாம்
துறைதோறும் உருப்போட்டு நடிப்பதோ?

மனிதனே மனிதனை அழிக்கிறான் – அந்த
மடமைக்கு விருதிட்டுக் களிக்கிறான்!
கனிவூறும் உள்ளமே இல்லையோ – அந்தக்
கருணைதான் உரிமைக்குத் தொல்லையோ?
புனிதர்கள் தரிசனைச் சத்தியம் – மண்
புதையுண்டால் வேறென்ன நித்தியம்?

இன, மத, மொழி எங்கள் தாயே – அதில்
இல்லாத வெறி யேற்றுவான் நரி, நாயே
கணமொரு கொலை தரும் குண்டன் – அந்தக்
கயமையில் நுகர்வதே அதிகாரப் பண்டம்!
மனிதாபி மானத்தைக் கொன்று – இன்
மகத்துவம் கண்டவர் புவியிடை உண்டோ?

சமதர்ம சிந்தனை தூண்டும் – ஜன
சமுதாயப் பரிவுக்கே சுவாசிக்க வேண்டும்!
மொழி, இன மதமென்ற பாங்கில் – மனம்
முனையாத பொதுமையே மானிடப் பூங்கா!
நமையாள் இறைவனே குறியாய் – செயல்
நாட்டுதல் ஒன்றே நம் நெறியாம்!

# வாழ்க தொண்டர்!

அரசியலில் பதவிபெற அங்கலாய்த்து,
அமையவரும் சந்தர்ப்ப மேடையேறி
பரவசமாய்ப் பொழிவார்கள் முழங்குவார்கள்!
பாமரரின் துயரெண்ணிப் பதறுவார்கள்!
கரகோஷம், விசிலடிக்குக் கடலேயஞ்சிக்
கலகலக்கும் ஊர்களித்து ஊஞ்சலாட
வரவேற்பு, மாலை, வெடி, பந்தல் தோறும்
வாழ்த்துப்பா, ஆலாத்தி, பன்னீர் வீச்சே!

'இது நமது பதி' யென்பார் 'இங்கிருப்போர்
என் ரத்தத்துளி' யென்பார், 'அயலார் செய்த
சதியாலே வாழ்விருண்டு, வறுமைப்பட்டுச்
சாக்காட்டில் நலிகின்றீர், நீவிரெல்லாம்
குதித்தெழுந்து ஆதரித்தால் இக்கணத்தே
குறை தீர்ப்பேன்' என்றள்ளி நெருப்பு வைப்பார்
கதி என்ன? அயலெரியும்! கோயில், பள்ளி
கரியாகும் கிராமத்தார் அகதியாவார்!

ஊரடங்கும் ஆல் போன்ற உறவுக்குள்ளே
உள்கனிந்து புறமினித்து வாழ்ந்தோர் தங்கள்
வேரறுந்த வகையறியார் முகாமுக்குள்ளே
வேதனைக்கே விலைப்பட்டு வதைவார் – அந்தப்
போர் முடித்த பெருந்தலைவர் அதிகாரத்தின்
போசாக்கில், குபேரனையே ஏவல் கொண்டு
பாரளப்பார், புயனளப்பார், பெண்டு, பிள்ளை
பளபளக்கப் பளபளப்பார் வாழ்க தொண்டர்!

# பாதாளத் துணை !

பணமே உன்சக்திதான் சக்தி – நீ
பலகோடி மக்கள் தம் வாழ்விற்கு முக்தி!
தினந்தோறும் கொலை, கொள்ளை செய்வார் – கொடும்
தீயார் தம் செயல்மேவி மென்மேலும் உய்வார்
கணமேனும் மானிடர் மறவார் – அந்தக்
கடவுளை விட்டாலும் பணமுனைத் துறவார்!

முட்டாளைச் சமூகத்தில் பணமே – ஒரு
மூதறி வாளனாய் ஆக்கலுன் குணமே!
கெட்டாரும் உன்னருளாலே – மகா
கீர்த்தியில் வாழ்கிறார், சிரசுக்கு மேலே!
தொட்டாலே துலங்குவான் மனிதன் – உன்
தொடர்புதான் இலையென்றால் இங்கு யார் புனிதன்?

அட்டகாசங்கள் பல செய்வான் – உன்
ஆற்றலால் அறிஞனே வீழ்ந்திட வைவான்!
முட்டவரும் பகை சற்றே – நீ
மூச்சிட்டால் கூட முடிந்திடும் முற்றே!
திட்டங்கள் போட்டவர் வீழ்வார் – உன்
திருவாளர் உலகையே திடீரென ஆள்வார்.

அதிகார ஆதிக்கம் தேடி – உன்னை
அணைகின்ற பக்தர்கள் எத்தனை கோடி?
விதியையும் விலை கொள்ளமுனைவார் – அந்த
வித்தையைக் கதை கதையாகவே புனைவார்!
சதிக்குப் பின் விளக்கடி இருளாய் – அங்கு
சாதனை புரிகின்ற பணமென்ற பொருளே!

இலட்சியவாதிகள் என்பார் – உன்னில்
இடறியே பதம் கெட்டு எச்சிலும் உண்பார்!
அலட்சியப் பட்டுனைத் தீண்டார் – தினம்
அன்றாடங் காய்ச்சி ஆகவே நீண்டார்!
பலத்துக்குப் பலவீனம் நீயே – மிகு
பாதாளம் வரைக்குமே துணையான தாயே!

# தமிழரானோம்!

நமது கலை, கலாசார விழுமியங்கள்
நமது பெறுமானத்தின் முத்திரைகள்!
சுமையான நாகரிக சகவாசத்தின்
சுவைமயக்கில் நம்மைநாம் இழப்போமாயின்
அமைவான இனப்பாங்கு சிதறிச் சோர
அந்நியமாம் பாழுக்குள் தனிப்போம்; மேலும்
இமைத்தல் முதல் செயலாயும் காலதேவன்
எண்ணத்தில் சோரர்களாய் இழிந்துபோவோம்!

ஆயகலை நேசிப்போம், அறிவியலின்
அற்புதங்கள் வரவேற்போம்! திசைபரந்த
தேயத்தார் நடைமுறைகள் தெரிவோம்! ஆனால்
தேசுடைய எங்கள் கலை கலாசாரத்தின்
தூய நிலை அணுத்தோறும் துலங்கச்செய்யும்
சுரணையுள தமிழனென நிமிரவேண்டும்
ஏய புகழ் காத்தினத்தின் வலிமை சேர்க்கும்
எங்கள் கலை கலாசார முதுசம் ஒன்றே

தமிழேதான் தமிழர் தம் நாவாய் நின்று
தமிழோம்பும் திறன்கண்டு அயலாரெல்லாம்
அமிழ்தென்றே ஆசித்து ஆய்வு செய்யும்
அரும்பணிக்கு இலக்கணமாய் அமையவேண்டும்
நமதரிய குறள் கண்டே தமிழைக் கற்ற
நல்லறிஞர் சான்றை நாம் மறந்துவிட்டு
சுமையென்றே நெஞ்சொதுக்கி, ஆசாரத்தின்
சொகுசுக்காய் தமிழ்பேசும் தமிழரானோம்!

# ஆய்வு தேவை!

தமிழர்தம் ஆட்சியோடு
        தகர்ந்தது இனத்தின் கோட்டை!
தமிழர்தம் வாழ்க்கை விட்டுத்
        தனித்தது தமிழர் சால்பு!
தமிழர்தம் சிந்தை சாக்ச்
        செத்தன இலக்கியங்கள்!
தமிழரின் தமிழன் இன்று
        தமிழனா? ஆய்வு தேவை!

தீண்டாமை வேறுபட்டான்!
        திசையினில் வேறுபட்டான்!
வேண்டாமை வேறுபாட்டால்
        விளையாட்டாய் சாகுகின்றான்!
தூண்டலும் இரையுமாகிச்
        சுவைத்தழி வோனுமாகி
தாண்டவம் ஆடுகின்றான்
        தமிழனா? ஆய்வு தேவை!

உரிமையாம் வாழ்வு தேவை!
        உறுதியாம் அமைப்புத் தேவை!
பெருமையை ஏலம் போடும்
        பேடிமை எவர்க்குத் தேவை!

சரிநிறை கொள்கைக்குள்ளே
சரிவுகள் எரிவுகள் ஏன்?
தரித்திரம் உழக்குகின்றான்!
தமிழனா? ஆய்வு தேவை!

வீட்டுக்குள் பங்குப் போரே!
வீதிக்குள் சாதிப் போரே!
தோட்டத்தில் திருட்டுப் போரே
துயருக்குள் மகிழ்ச்சிப் போரே!
ஆட்டத்தில் சுரண்டல் போரே
ஆலயத்தில் பதவிப் போரே!
நாட்டத்தில் உரிமைப் போராம்
நரித்தன மோதலே போர்!

## உருவங்கள் மானிடராய்...!

ஏழை எளியர் என்ற
        இலச்சினையில் மானிடரில்
கூளங்கள் உண்டோ?
        குப்பைகளோ அம்மக்கள்?
வாழ வகை அற்று
        வளங்காட்டும் துணையற்று
பாழுக்குள் மிதக்கும்
        பதர்களோ, என் தோழர்?

அரிதரிது என்றே
        ஆர்ப்பரிக்கும் தத்துவத்தின்
மனிதரில் இவரிலையோ?
        மகிமை இவர்க் கிலையோ?
பெரிய தெய்வீகம்
        பேசரிய லௌகீகம்
உருகி வடிக்கின்ற
        உண்மைக்கு இவர் புறமோ?

தங்கம், பொன், வைரத்தில்
        தகதகத்து ஆட்கொள்ளும்
எங்கள் தெய்வங்காள்
        இவர் கீழ்மை காணத்தான்
சிங்கரித்துத் தேர்ப்பவனி
        தெருச்சுற்றி வருவீரோ?
பொங்கும் பக்தர்களின்
        பூசனைக்குப் பொருளென்ன?

காயும் வயிறெரிய
கண், காது பஞ்சடைய
மேயும் நோய்க் கிருமி
மிச்ச ரத்தம் பரிமாற
தூய்மை கந்தலுக்குள்
துயர் பொருமி நாணமுற
தாய்மை உடல் நிமிர்த்த
த்டம் தேடி அலைகிறது!

வறுமைக்கு உருமெலிந்து
வரட்சிக்கு நிறமுலர்ந்து
தறுகண் அத்தனையும்
தன்னிலே சீரணித்து
பொறுமையின் ஓர்வடிவாய்
புளியை நிழல் கிடந்து
நிறைகோலாய் மானிடத்தை
நிறுக்கிறது ஓர் முதுமை!

வருங்கால இளமைகள்
வம்பாடும் வழிசுற்றி;
பருவங்கள் விழலாகி
பத்தினியில் பித்தாகும்
துருவங்கள் நாமன்றோ ?
சொகுசுக்குள் பேறடைய
உருவங்கள் மானிடராய்....
ஒளி வீசி இனம் காப்போம்!

# சுதந்திர யாகம்!

இந்திய நாட்டின் சுதந்திரம் வேண்டி
எழுந்தது எரிமலை மக்களைத் தூண்டி!
சிந்தையில் உரிமையின் சிம்ம கர்ச்சனை!
தேசிய வாழ்வுக் குயிரே அர்ச்சனை!
தந்திர மந்திர சழக்குகள் இல்லார்!
தன்னுயிரும் தரும் சுதந்திர வல்லார்
எந்தாய் பாரதம் எழுகென ஆர்த்தார்!
இமயத்தின் உச்சிக்கே புஜபலம் சேர்த்தார்!

தீட்டிய வாள் நிகர் திலகரின் தலைமை
தீட்சண்யர் வ உ சிதம்பரன் ஆண்மை
மூட்டிய தீக்கனல் முற்றியெழுந்தது
முடியாட்சி வெள்ளையர் முதுகில் விழுந்தது!
வேட்டுரை 'சிவா' வெடி வேகத்தில் வாலிபர்
வேங்கையாய்ச் சூழ்ந்தனர், மாகவி பாரதி
பாட்டினில் வாளீட்டி படைக்கலம் செய்தனன்
பாரதம் எங்கணும் சுதந்திர யாகமே!

காந்தி என்றொரு கண்ணியன் விடுதலைக்
களத்திலே சாத்விக காண்டம் வகுத்தனன்!
ஏந்திய அஹிம்சையும் சத்தியாகிரகமும்
ஏகாதிபத்திய வேரையே அரித்திடும்
சாந்தி நெறியிலே சரித்திரம் படைத்ததும்
தகர்ந்தது, வெள்ளையர் தடியரசாட்சி
பாய்ந்தது, சுதந்திரப் பட்டொளியாண்டும்
பாரதம் வெல்க வாழ்கவென் றார்த்தே!

# வரவை மிஞ்சிய செலவு... ?

வேட்டி, சேலை நடைமுறையில் வெட்கமா ?
பெல்பொட்டன், ஜீன்ஸ் என்றால் சொர்க்கமா ?
பாட்டி, பாட்டன் கோலமென்ற ஏக்கமா ?
பாவனையில் மினுங்குவதே நோக்கமா ?

சூட்டி, சுசி பெயரில் என்ன சுவைகளோ ?
சொல்லுக்குச் சொல் அந்நியமே கலைகளோ ?
ஏட்டுத்தமிழ் நாகரிகம் பேச்சுக்கோ ?
இழித்தவாய் மோகமயல் மூச்சுக்கோ ?

தமிழன் எங்கே தாவுகிறான் தெய்வமே ?
தன்மரபு சோரம் போக உய்வமே ?
அமிழ்தனைய பண்பு நெறி பொய்த்ததோ ?
அன்னைமடி பரத்தையினால் கைத்ததோ ?

சாதி வேலி போட்டுத் தன்னைத் தின்றவன்
சமர் விளைத்து குழுக்குழுவாய்க் கொன்றவன்
பேதகத்தால் அயலுறவைப் பிய்த்தவன்
பேதமைக்குள் சீரழிய வைக்கிறான் ?

தலைமையற்ற நிலைமை ஒன்று பூத்தது !
'ததிங்கனதோம்' வாழ்க்கையாகக் காய்த்தது !
வலை விரிப்பார் இலாபம் தேட வாய்த்தது !
வரவை மிஞ்சிய செலவாய் மரணம் தேய்த்தது !

# கண்ணீர் வாழ்க்கை!

பசியொழிய வயலுழக்கிப் பாடுபட்டோம்
பழத்தோட்டம், கனிச்சோலை பண்ணை தந்தோம்
வசிப்பிடத்தைக் கலைக் கோலமிட்டு நீவிர்
வண்ண உடை புனைந்தழகு விஞ்ச வைத்தோம்
கொசுச்சிறகின் அளவு துயர் கொள்ளாவண்ணம்
கோடிவகை மருந்தாகித் தோள் வலித்தோம்
விசித்திரரே நம்முழைப்புக் கெல்லாம் நீவிர்
விதித்த விலை? வறுமைபிணி சாக்காடேதான்!

நகர் செய்தோம் தெரு கோயில் பூங்கா, சந்தை
நல்வினை கொள் தொழிற்சாலை, பள்ளிக்கூடம்
நுகர்வாரின் வகைமலிந்த நூதனங்கள்
நுண் கருவிச் சாதனங்கள் கோடி செய்தோம்
மிகு உழைப்பால் இவ்வுலகை வானம் நோக்கி
மேற்கொள்ளும் உலாவுக்கு நீவிர் தந்த
தொகை என்ன? தொழும்பன் இழிதோட்டி வம்பன்
தொல்லை என்ற வசைமாரிச் சாக்காடேதான்!

தொழிற்சங்கம் என்கின்றார் சுவனவாழ்வைத்
தோற்றுவிப்போம் தோழர்களைக் காப்போம் என்பார்
பிழிகின்ற எம்மிரத்தச் சொட்டில் சந்தா
பிரித்தெடுத்த தொகையாலே தொகை பெருக்கிச்

சுழியோடித் தொழிலாளர் சக்தியாகித்
துள்ளுகிறார் உலகரங்கில் எங்கள் வாழ்வோ
கழிகிறது சாவெண்ணி பாட்டாளிக்குக்
கதி இல்லை, விதி இல்லை கண்ணீர் வாழ்க்கை!

ஆண்டிலோர் 'மே' வரும் அன்றொரு தடபுடல் வான்முட்ட
அற்புத கோஷம் அழகிய பதாகை அடிசக்கை
பாண்டியன் போல தலைவர் அசைவார் அநுமார் வால்
பாங்கிலே ஊர்வலம் பதுங்கும் தோழர் குடல் கிழிவார்
தூண்டிலின் மீனாய் தோழமைமயங்க ஜனவெள்ளம்
தூள்படும், வானிடி, மின்னல் முழக்கம் மேடையிலே
தாண்டவம் முடிய வேதாளம் முருங்கை மரம் பாய்ந்து
தாவிய கதைதான் எம்மவர் பாடு தரித்திரமே!

# குடை நிழல் முக்தி?

பாயும் குரங்கு நெஞ்சத்தின்
பாய்ச்சல் தவிரும் பக்குவத்தை
கோயில் கண்டு குணம் பெருகும்
கொள்கை பூண்டு, வாரத்தின்
ஞாயிறு வெள்ளி நாளெண்ணி
நண்ணும் மகனே மகளேநீர்
போயும் போயும் புடமாகாப்
புதுமை என்ன ஆய்ந்தீரே?

பாடிப் பரவி கும்பிட்டீர்
பரமன் பூசை சேவித்தீர்
கோடி அர்ச்சனை கொள்வித்தீர்
கோயில் சுற்றி வலம் வந்தீர்
தேடியசித்தம் பெற்றீரோ?
தெய்வத் திருவருள் உற்றீரோ?
மூடிய மாயைத்திரை கிழியா
முணுமுணுப் பெதனைச் சாதிக்கும்?

அணிமணி பூண்ட ஆசாரம்
ஐயன் கண்ணில் மண்தூவி
பணியும் நெஞ்சின் அகங்காரப்
பாம்பை மறைக்கும் என்றோ நீர்

துணிவாய்ச் சாமி திருச்சமுகம்
சூதாட்டத்தை நடத்துகிறீர்?
கணிதம் பிழைக்கும் இதயத்தைக்
கசக்கிப் பிழிந்து மெய் காண்பீர்!

ஏழை துயரில் எளியாரின்
ஏக்கத் துயரில் பிச்சைக்கே
வாழ்வார் துயரில் வாழ்வற்ற
வஞ்சி துயரில் பக்தர்களைச்
சூழ்ந்து தேடும் ஆண்டவனைச்
சூழ்ந்து காணும் திறனற்று
நாளை எண்ணி நடத்துகிற
நாடகம் ஆன்ம நட்டந்தான்!

சேவை சேவை என்றிங்கு
செய்வன என்ன? அகங்காரத்
தேவன் பணியே ஜே. பியாய்
தேசம் கவர்ந்த விருதோடு
ஏவல் கொண்ட கௌரவத்தில்
ஏலம் போகும் செல்வாக்கை
கோயில் வைத்துக் கும்பிட்டுக்
குடை நிழல் முக்தியில் கொழுக்கின்றோம்!

# உழைப்பெழுந்த விடியல்!

கடல் மொய்த்த வான் கோட்டில்
கதிர் மொய்க்கச் செங்கதிரோன்
உடல் சிலிர்த்தான் வாழியடா தோழா! – நம்
உழைப் பெழுந்த விடியலிந்த வேளை!

புல் புதராம் பொய்மையிலே
புதையுண்ட பொன்களமாம்
நெல் வயலை விடுவிக்க எழடா! – பசி
நிறு தூளாய்த் தூளிபட உழடா!

கனிச்சோலை மாந்தோப்பு
கதலி வனம், பலாத் தோட்டம்
இனிப்படைய உன் தமிழை ஏற்று! – மக்கள்
இன்பமொன்றே உன் பணியாய்ப் போற்று!

செடி கொடிகள் சித்தரித்த
செங்கீரை, காய் கிழங்கு
குடியரசு வளமடையக்காட்டு! – எங்கள்
குலமகளிர் சமைப்பர் கறிக்கூட்டு!

தேனூறும் காடுகளாம்
தென்பூறும் பண்ணைகளாம்
மீனூறும் நீர் நிலையாம் கிழக்கு! – உன்
மேலுழைப்பே செல்வமிகும் வழக்கு!

கிழக்கெமது தாய் என்பாய்
கீர்த்தி எங்கள் உழைப்பென்பாய்
சழக்கென்ன சமரென்ன கூடு! – தமிழ்
சங்கமித்த நல்லுறவைப் பாடு!

# வல்லமை பெறவேண்டும்!

பணத்தைக் கண்டதும் பாவனை வேறாய்
பார்வை எங்கோ படருது – மனப்
பார்வை எங்கோ படருது!
குணத்தில் திரிபோ? குடும்பமும் உறவும்
குப்பை கிடந்து உலருது – தெருக்
குப்பை கிடந்து உலருது!

பேச்சும் நடையும் தனியொரு போக்காய்
புரண்டு புலனைக் கலக்குது – இயல்
புரண்டு புலனைக் கலக்குது!
மூச்சொரு நூறு சிரிப்பும், சிமிட்டலும்
முள்ளாய் வந்து உலக்குது – விஷ
முள்ளாய் வந்து உலக்குது!

புறஞ்சேர் மூலை கோடி நிலங்கள்
போடியார் உடமையாகுது – புதிய
போடியார் உடமையாகுது!
அறஞ்சேர் கோயில் சத்திர உண்டியல்
அவரையே கடமையில் தூக்குது – அந்த
அவரையே கடமையில் தூக்குது!

ஊருக்குள் நுழையும் அரசியல் அவரை
ஒரு பெருந்தோப்பாய் நோக்குது –பெரிய
ஒரு பெருந்தோப்பாய் நோக்குது!
பேருக்குப் பின்னே ஜே.பி முதலிப்
பெருமையில் அவரைத் தூக்குது – மகா
பெருமையில் அவரைத் தூக்குது!

களனியில் மாடாய் உழைக்கும் தோழன்
வயலில் தேய்கிறான் – இவர்
வயலில் தேய்கிறான்!
இளநீர் போன்ற அவன் மனையாளோ
இவரில் மாய்கிறாள் – அன்னை
இவரில் மாய்கிறாள்!

கூட்டம் அவரிடம் கோயில் அவரிடம்
கூச்சம் எது செய்யும் – மனைவி
கூச்சம் எது செய்யும்?
ஆட்டம் அவரிடம் ஆளுமை அவரிடம்
ஆண்மை எது செய்யும் – புருஷன்
ஆண்மை எது செய்யும்?

நல்லவர் மட்டுமே செல்வராயமையும்
நடைமுறை வரவேண்டும் – ஆமாம்
நடைமுறை வரவேண்டும்!
வெல்லும் உலகினில் விதியிதைச் செய்ய
வல்லமை பெறவேண்டும் – நீ, நான்
வல்லமை பெறவேண்டும்!

# உலை போட்டுப் பொங்கவா?

மெய்யுருக எங்கள்
மேன்மையெலாம் பட்டுருகி
கையுருகும் கேட்டுக்கு
கண்ணிலொரு சொட்டின்றிப்
பொய்யுருவாய்த் தோற்றும்
பொழுதின்று, படலையிலே
தைமகளா? அடிபேய்ச்சி
தரித்திரத்தில் பொங்கலா?

வீடுகள் பொங்க
வீதி, அயல், ஊர் பொங்க
கேடுகள் ஒவ்வொன்றாய்க்
கிளிமறித்துப் பழி பொங்க
ஓடுகளாய் முகாமொதுங்கி
ஒருவேளைதான் பொங்கும்
கூடுகள் தேடியோ
கூழ் பொங்க வந்தாய் நீ?

'தைபிறந்தால் வழிபிறக்கும்'
சங்கதியை எத் தையும்
மெய்ப்பித்தல் உண்டடியோ?
மேல்மூச்சி வாங்க, நாம்
கைத்துப்பாக்கி, கொலைக்
கருவிக்கு அள்ளுண்டு
மொய்த்துக் கிடக்கின்ற
முகாமைப்பார் பொங்கலா?

உலர்ந்த தீஞ் சோற்றை
உப்பிட்டு நீரிட்டுக்
கலந்தூட்டிப் பிள்ளைகளின்
கதறலைக் குளிர்விக்க
அலைகின்றாள், உப்புக்கு...!
ஐயோ நீ முற்றத்தில்
உலை போட்டுப் பொங்கி
உண்ணவா வந்துள்ளாய்...?

அடிவயிறு கொளுத்தும்
அன்னை பாழ் முலையைக்
கடித்தலறும் சிசுவின்
கவலையால் விலாப்புகுந்த
வெடி மறந்து வேகின்றேன்!
வெல்லம், பால், பயறு, பழம்
அடிக்கருப்பஞ் சாற்றோடு
அரும் பொங்கலா, பொங்கும்?

இங்கு பொங்காது!
இனிமேலும் சந்தேகம்!
பங்கு போட்டெம்மைப்
பந்தாடுவார் மனைக்குக்
கொந்த றாத்தாக்கிக்
கொடுப்பாயேல், பொங்கல்
இந்திரபோக மாய்
இனிக்குமே! போடி போ!

## புதினம் தானோ ?

பசைகுன்றும், பளபளப்புத் தீயும், மார்பின்
விசைகுன்றும் விருந்தழகு விட்டுத் தேயும்
இசை குன்றும் எழில் குன்றும் எனவே ஈன்றாள்
சிசுவுக்குப் புட்டிப்பால் ஊட்டுகின்றாள்!

மார்க்கச்சை மருவாது, முந்தானைக்குள்
மாதளையே காய்க்காது ஆண் பார்வைக்குப்
போர்த் தேங்காய் பொலியாது எனவே ஈன்றாள்
புட்டிப்பால் சிசு நுனைக்கப் பூரிக்கின்றாள்

போர்முகத்தில் புறங்காட்டி வந்தோன், உண்ட
மார்திருகி எறிந்தாளின் மரபுக்காரி
பேர்தாயாய் நிற்கின்றாள்! இவளின் பிள்ளை
பிழைபட்டால் எதைத்திருகி எறிவாள் அண்ணே?

கோயில் விழா, மணவீடு கூடும் பெண்கள்
கூட்டத்தில், மயில்போலக் கோலம் காட்டும்
பேயுணர்வின் கவர்ச்சிக்கு அடிமைப்பட்டு
பெற்ற சிசு புட்டிப்பால் பருகச் செய்தாள்

அறம், கருணை, அன்பு, தயை கொண்ட தாய்மை
அகத்துறையின் வெறும்பாட்டோ? அன்னை பண்பு
புறங்கடந்த வாறென்ன? நாளை வாழ்வு
பொய்யுறவின் புனைகதையின் புதினந்தானோ?

ஈன்ற சிசு நலங்கடந்த இன்பமொன்றை
இச்சித்த பத்தினித்தாய் எம்மில் உண்டோ?
ஆன்ற திருவள்ளுவனார் வகுத்த வாழ்வின்
அடிப்படையில் நம்மியல்பு அமைய வேண்டும்.

# எடு சூலம், மழு, வேல், ஈட்டி !

பார்க்கின்றேன், சூழல், அயல் வாழும் மாந்தர்
படுதுயரை, பரிதவிப்பை, அவல வாழ்வை
ஈர்த்தணைப்பார் இல்லாராய் சேரிக்குள்ளே
ஈயெறும்பு கிருமியொடு இடருகின்றார்!
ஆர்த்தொலிக்கும் திருக்கோயில் சாமி உன்றன்
அருட்பார்வை இவர்கள் பால் இல்லையென்றால்
ஆருக்குச் ,சாமி நீ? அடியார்க்குள்ளே
அடையாளங் கண்டுதான் கருணை வீச்சோ?

வட்டியினால் ஊரையே வாரிக்கொண்ட
வல்லிபுரம் உன்பக்தன் அவன் பூசைக்கே
கொட்டுகிறாய் திருவருளை, அடியாள் வைத்துக்
குவிக்கின்றான், பொருளுடமை! ஐயோ சாமி
முடியாதா அவனுக்குப் புத்தி சொல்ல?
முடியாதா, மக்கள் நலன் ஓம்பச் செய்ய....?
அடியார்கள் அனைவருக்கும் சாமி என்றால்
அருள்நோக்கைச் சேரிக்கும் விசாலிப்பாயே!

காமியரும், கயவர்களும் நடத்தும் கொள்ளை
கந்தா! உன் கருணை எனத் துள்ளும்போது
சாமி நீ சடங்கிற்குள் குந்திக் கொண்டு
சாட்டாங்க பாவனையில் இருத்தல் என்ன?
'ஓம் சக்தி' என்றெழுவாய் சமுதாயத்தின்
ஓட்டுண்ணி, பெருச்சாளி அமைப்பு மாற
தோம் தீயும் தாண்டவத்தைத் தொடங்குமாறு
தொழுகின்றேன், எடு சூலம், மழு, வேல், ஈட்டி!

## நன்றித் தாய்!

கறுப்பன் எங்கள் வீட்டுநாய்
களங்கமற்ற பால் உள்ளம்!
பொறுப் புணர்வு பூண்ட ஒரு
போர் மறவன் போல் நோக்கு!

வீட்டுச் சாரல்தான் படுக்கும்!
வேற்றாள் கண்டால் வெடிதீர்க்கும்!
நீட்டும் எச்சில் உண்டாலும்
நெறியார் நாணும் நன்றித்தாய்!

விழித்திருக்கும் யோகி போல்!
வீறிருக்கும் விவேகி போல்!
களித்திருக்கும் வீட்டாரில்
கனவிருக்கும் வேற்றாரில்!

சாமி என்றால் எசமான்தான்!
சடங்கு என்றால் காவல்தான்!
நேமம் தவறா உளவாளி
நெஞ்சுவந்த உழைப்பாளி!

## சுடலை தான்.... ?

முதுமையின் வற்றல்,
அரிவாள் கூனல் – ஒரு கிழவி
முன்பின் தளர்வைக்
கைத்தடிச் 'சாமி'யில் கைவிட்டு
பதைக்கும் கழுத்துக்
குழியில் மூச்சு பதைபதைக்க
பசிக்கொரு சிறங்கைப்
பருக்கை தேடிப் பரவுகிறாள்!

இல்லாமை என்னும்
இழவு இந்த முதுதாயை
இப்படி வருத்தும்
காரணம் என்ன ? தேடுகிறேன்!
இல்லந் தோறும்
உண்ணலில் சிந்தும் எச்சமுமே
இல்லாளாக ஏங்குவோர் –
இவள்போல் எத்தனை யெத்தனையோ ?

எறும்பு ஈய்க்கே
இல்லா வறுமை மானிடரில்
இருப்புக் கொண்டொரு
துரும்பாய் வருத்தும் சூதென்ன ?

தரும் தத்துவம்,
ஐந்தொகை காணும் அரணாக
சமைத்த அமைப்பின்
சமநிலைச் சரிவோ? தலை எழுத்தோ?
தற்குறிப் பேற்றணி
யாகக் கடவுளைத் தலைவிதியை
உற்பத்தி செய்து
உடமை பெருக்கிய உத்தமனார்
அற்புதப் படையலின்
அறுவடைப் பயனே மானிடரைக்
கற்பனைப் பொறியில்
கழுத்தறுக்கின்ற கலையாச்சோ?

எத்தனை பக்தி!
எத்தனை பரவசம்! எத்தனை அர்ச்சனைகள்!
எத்தனை தீர்த்தம்!
எத்தனை திருவிழா! திருவிளக்கு!
சத்திய உள்ளம்
சமத்துவ உணர்வு சமநிலை மனப்பாங்கு
சித்தி யுறாவரை
சமுதாய சேமம் சுடலைதான்!

# சர்வ சஞ்சீவி!

குழந்தைவேலு சாத்திரியைக்
கூட்டி வாருங்கள் – நம்
குழந்தை குட்டி கால பலன்
குறித்து வாருங்கள்!

இழந்த பொருள் வசப்படுமா?
என்று கேளுங்கள் – நம்
வளவுச் சாமி குறைகள் தீர
வழியைக் கேளுங்கள்!

வதனமார்கள் வருத்தி வாட்டும்
வகைகள் தெரியல்ல ... எனக்கு
எதனால் இந்த இடுப்பு வலிப்போ
அதுவும் புரியல்ல?

துலா முறிந்து விழுந்த கனவு
நெஞ்சைத் துழைக்குது – மகள்
கலாவதியின் மாசத் தொடக்கு
கவலை யளிக்குது!

நச்சு நச்சென வீட்டுப் பல்லி
நஞ்சு வைக்குது – அந்தப்
பிச்சம்மாவின் சீட்டுக் கவலை
பேயாய் மொய்க்குது!

நாலு பெற்றால் கிழவியாமா
நரைத்துக் கொட்டுது – அந்த
வேலு சாத்திரி ஏடு பார்த்து
வினைகள் ஓட்டுவார்!

# உனக்கு நீயே....

நெஞ்சே, நீள நினைந்தென்ன?
நினைவே பொருமிக் கனத்தென்ன?
தஞ்சம் உனக்கு நீ யன்றித்
தரிப்பிடமில்லை... சாந்தி அடை!

உறவும் முறையும் பொய் யமைப்பே
உள்ளும் புறமும் 'பை'யமைப்பே!
பறையும் சூழலும் பரபரப்பே!
பகடையின் முடிவு கண இழப்பே!

பழுத்த ஆலாய் நீ இருந்தால்
பறவை ஆயிரம் உறவாடும்!
உளுத்த சருகாய் உதிர்ந்து விட்டால்
உருப்படி உனக்கு நீயே தான்!

மனைவி இனிதே, மக வினிதே!
மன்னும் நட்பு உறவினிதே!
எனினும் 'தன்'னில் தரியாத
இனிமைகள் எல்லாம் எட்டிக்காய்!

எல்லாம் முதிரும் என்கின்ற
இயக்கச் சுழற்சி தெரிவாயேல்
வல்லாண்மைக்குள் வலுப்பெற்று
வரவு செலவுக்கயல் நிற்பாய்!

எஞ்சிய நிலையை, விதை நெல்லாய்
எடுத்துன் களனியைப் பயிராக்கு!
தஞ்சம் உனக்கு நீயென்ற
தரி பிடம் ஏறி உயிராக்கு!

# உறவும், வாழ்வும் !

உயிரீந்தார் ஈ வே ரா!
　　　　உணர்வீந்தார் அண்ணாவே!
பயிரானார் நல்லிளைஞர்
　　　　பண்க வென்றாய் தமிழ் நிலமே!

தமிழானார் பாரதியார்!
　　　　தவிடானாய் பண்டிதமே!
அமிழ்தானது தமிழ்ப்பாட்டு!
　　　　அறிவானது மடமை வெளி!

கனக சுப்பு ரத்தினமும்
　　　　கல்யாண சுந்தரமும்,
தினவெடுத்த புலமையணித்
　　　　திசைக்கருவி, தாமானார்!

உண்மை வழி, வி க வும்
　　　　உழைப்பு வழி, ஜீவாவும்
பண்பு வழி மு க வும்
　　　　பசளையிட்டார் வாழ்வுக்கே!

கீதை திரி பீடகமும்
　　　　கிறிஸ்து பிரான் போதனையும்
வேதமறை குர் ஆனும்
　　　　வித்தியதே நம்முறவு!

# எங்களூர்க் காந்தி !

தன்வாழ்வு, தன் மனைவி மக்கள் வாழ்வாய்த்
தனித் தெண்ணி இடர்ப்பட்ட எங்களூரில்
பொன்பூத்து, மனம் கசியும், புதுமைப் பூவாய்
புகழ் பூத்த கண்டு மணி ஐயா செய்த
பன்னரிய பணி யெண்ணிப் பூரிக்கின்றேன்!
பயன் நோக்காப் பெருவாழ்வைக் கோயிலாக்கி
உன்னியுன்னித் தேடுகிறேன்! அன்னார் போல
ஒருவரையே தேடுகிறேன். தேறுவேனோ ?

ஒரு நோக்கே உயிர்நோக்காய் ஒழுகிநின்று
ஊருக்கே தொண்டாற்றிப் பசளையான
பெருமனிதன், கண்டுமணி ஐயாவின் கால்
பெருவிரலின் தூசியிலே உணர்ச்சி பெற்ற
உரிமையெனக் குண்டென்ற உடன்பாட்டாலே
ஊறுபட்ட என்னூரார் அவலம் நீங்கித்
திருவடையும் நிலைமைக்காய் ஐயாவைப் போல்
தெள்ளியரைத் திசைசுற்றித் தேடுகின்றேன்!

சாதிப்பேய் ஊரவரைப் பங்குபோட்டுச்
சதிராடத் துவையுண்ட வைக்கோலாகிப்
பேதலித்த வேளை ஒரு தாயாய் நின்று
பித்தகற்றிப் பெரும்பணியால் இணைய வைத்து

ஓதரிய தியாகத்தால் ஊரவர்க்கு
        ஒரு காந்தி அடிகளாய் ஓங்கி நின்ற
மாதவராம், கண்டுமணி ஐயாவைப் போல்
        மானிடரைத் திசை சுற்றித் தேடுகின்றேன்!

காடெழுந்த நிலம் திருத்திக் கல்விச்சாலை
        கால் கொள்ள இளைஞர்க்குக் கண்ணைத்தந்தார்!
பாடிழந்த தொழிலாளர் பலத்தைச் சூழ்ந்து
        பகலிரவாய்த் தொண்டாற்றி அம்மன்கோயில்
மேடையிலே வித்தூன்றி எழுச்சிகண்டார்!
        மேய்ச்சலிட்ட அறியாமை, சாதி, பேதம்
பாடையெழக் கண்டுமணி ஐயா செய்த
        பணியொன்றா? அவரைப் போல் ஒருவர் தேவை!

# நாம் தொழும் நாதன்!

*விதி என்ற விலங்கொரு கேடு!*
*வீணராய் மனிதனைச் சிறையிடும் கூடு!*
*மதியோடு செயற்படும் முயற்சி*
*மானிலம் கொண்டதே இப்பெரும் உயர்ச்சி!*
*குதித்தேறும் மடைவெள்ளம் போலே*
*கூர்வேலாய்ச் சீர்பட்டால் வெற்றி உன்பாலே!*
*கதித்தெழும் புத்துணர்வாலே*
*கைகூடாதன உண்டோ இப்புவி மேலே!*

*ஊரிலே கோயில்கள் நூறு!*
*உயர்சாதி, தாழ் சாதிப் பரவணி வேறு!*
*தார்வீதி மேவாத சாதி!*
*சாமியின் கோயிலில் தனியொரு நீதி!*
*நேர்பிணிச் சாக்காட்டின் ஆட்டம்*
*நிகழ்தலில், சாமிக்குப் படையலே நாட்டம்!*
*வேரையே அரித்துண்ணும் மாயை*
*வேறென்ன சிந்திக்க வேண்டாமோ தாயே?*

*வேண்டுதல் வேண்டாமை இல்லான்*
*விமலனே, நாம் தொழும் வித்தகன் அல்லால்*
*கூண்டோடு குழி பறிக்கின்ற*
*குடும்பத்தைச் சாமியாய்க் கொள்ளுதல் நன்றோ?*

ஈண்டு நம் சம்பந்தர், அப்பர்
இன்தமிழ்த் தேவாரச் செம்பொருள் ஒப்பும்
ஆண்டவன் தாள் கொண்டு நின்றால்
அடிமைத் தனங்களை அன்றுதான் வென்றோம்!

மனத்திடை மாசிலா வாழ்வை
மலர்விக்கும் சத்திய தெய்வமே தேவை!
இனத்துக்குள் ஆயிரம் சாதி
இரண்டு முகங் கொண்ட சுரண்டலின் நீதி!
சனத்திடை அறியாமைப் போதம்,
சழப்பிடும் தரித்திரச் சாமிகள் வேதம்
அண்டாத மானிட தர்மம்
அருள்கின்ற நாதனை அடைதலே கர்மம்!



திரு. ஆ.மு.சி. வேலழகன் இலங்கையின் கிழக்கு மாகாணம், திருப்பழுகாமம் என்னும் கிராமத்தில் ஓர் நடுத்தர விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்.

இவர் 1952 –ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் இருந்தே பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றோர் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு அவர்களது சமூக சீர்திருத்தப் பணியை ஏற்று, கடந்த 35 வருட காலமாகப் பல சீர்திருத்தப் பணிகளைச் செய்து வருகிறார்.

1958 –ல் திருப்பழுகாமத்தில் 'கண்ணகி கலைக்கழகம்'

1963 –ல் அமிர்தகழியில் 'முரசொலி நாடக மன்றம்', 'திருக்குறள் மன்றம்'

1970 –ல் மட்டக்களப்பில் 'கிழக்கிலங்கைத் தமிழர் கலாச்சார மன்றம்', 'திருக்குறள் முன்னணிக் கழகம்'

1981 –ல் திருப்பழுகாமத்தில் 'திருக்குறள் மன்றம்'

1988 –ல் படுவான்கரையில் 'விவசாயிகள் அபிவிருத்திக் கழகம்'

1989 –ல் அம்பாறையில் 'திருக்குறள் முன்னணிக் கழகம்'

ஆகிய மன்றங்களை அமைத்து திருக்குறளை மக்களுக்கு பரப்புவதோடு பல சீர்திருத்தப் பணிகளையும் செய்தவர்.

இவரது நூல்களான 'தீயும் தென்றலும்' 1971 –லும், 'சாதியா சதியா' 1973 –லும் இலங்கையில் வெளிவந்தன.

வே. சிற்றரசு